பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை

05 08 2024 **MONDAY** **6.30 PM**

மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மின்னணு பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.
2. சுற்றுச்சூழலுக்கு உகந்த 109 பயிர் ரகங்கள் விரைவில் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக மத்திய அரசு கூறியுள்ளது.
3. கட்டிட வரைபட அனுமதிக்கான கட்டண உயர்வை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும் என்று பாமக வலியுறுத்தியுள்ளது.
4. காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட எட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.
5. பாரிஸ் ஒலிம்பிக் டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

<u>இனி விரிவான செய்திகள் ---</u>

<<<<<<>>>>

மின்னணு பொருட்களின் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், நாட்டிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் மின்னணு பொருட்கள் இடம்பெற்றுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இளையோரின் புத்தாக்க சிந்தனைக்கு கிடைத்த வெற்றி இது என்றும் திரு நரேந்திர மோடி அதில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>

சுகாதாரத்துறைக்கான நிதி ஒதுக்கீடு கடந்த பத்தாண்டுகளில் 164 சதவீதம் அதிகரித்துள்ளதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

மக்களவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

2013-ஆம் ஆண்டு 33 ஆயிரம் கோடி ரூபாயாக இருந்த நிதி ஒதுக்கீடு, நடப்பாண்டில் 90 ஆயிரம் கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

சுகாாரத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாகவும் அவர் கூறினார்.

மாவட்ட மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களை வலுப்படுத்துவதற்கு மாநில அரசுகளுக்கு தேசிய சுகாதார இயக்கத்தின்கீழ் நிதியுதவி வழங்கப்பட்டு வருவதாகவும் திரு நட்டா தெரிவித்தார்.

<<<<<<>>>>

சுற்றுச்சூழலுக்கு உகந்த பயிர் ரகங்களை அறிமுகப்படுத்த மத்திய அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

இன்று மாநிலங்களவையில் தமது துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து அவர் பேசினார்.

அடுத்த ஐந்தாண்டுகளில் ஆயிரத்து 500 புதிய பயிர் ரகங்கள் உருவாக்கப்பட உள்ளதாக அவர் தெரிவித்தார்.

விரைவில் 109 பயிர் ரகங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட உள்ளதாகவும் அவர் கூறினார்.

இயற்கை வேளாண்மைக்கு மத்திய அரசு ஊக்கம் அளித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கான திட்டங்களை விவசாயிகள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

விவசாயிகள் நலன் தொடர்பாக, மத்திய அரசை எதிர்க்கட்சிகள் குறை கூறுவது தவறானது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டம் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தியிருப்பதாகவும் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<>>>>

ராம்சார் தலங்கள் பட்டியலில் தமிழகத்தை சேர்ந்த 15 இடங்கள் இடம்பெற்றுள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை இணையமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங் கூறியுள்ளார்.

மக்களவையில் கேள்விநேரத்தின்போது இதனை தெரிவித்த அவர், கூந்தன்குளம் பறவைகள் சரணாலயம், சித்திரங்குடி பறவைகள் சரணாலயம், பள்ளிக்கரணை சதுப்பு நில காடு, வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் போன்றவை இதில் இடம்பெற்றிருப்பதாக கூறினார்.

<<<<<<>>>>

தமிழக மீனவர் சங்க பிரதிநிதிகள், வெளியுறவுத்துறை அமைச்சர் திரு ஜெய்சங்கரை இன்று புதுதில்லியில் சந்தித்து பேசினர்.

பிஜேபி மாநிலத்தலைவர் திரு அண்ணாமலையும் இந்த சந்திப்பின்போது உடன் இருந்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது மற்றும் சிறைபிடிக்கப்படும் சம்பவங்கள் குறித்து இந்த சந்திப்பின்போது விவாதிக்கப்பட்டதாக அவர் மேலும் கூறுகிறார்.

<<<<<<>>>>

தமிழகத்திலேயே விருதுநகர் மாவட்டத்தில்தான் இலவச வீட்டுமனை பட்டாக்கள் அதிக அளவில் வழங்கப்பட்டுள்ளதாக வருவாய்த்துறை அமைச்சர் திரு கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இன்று விருதுநகரில் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பிலான இலவச வீட்டுமனை பட்டாக்களை பயனாளிகளுக்கு வழங்கி அவர் பேசினார்.

அரசு திட்டங்களின் பலன்களை மக்களுக்கு நேரடியாக கொண்டு சேரக்கும் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டம செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

<<<<<<>>>>

யூ டியூப் சேனல்களை கட்டுப்படுத்தவும், முறைப்படுத்தவும் உரிய நடைமுறைகளை வகுக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக பதிலளிக்குமாறு சென்னை உயர்நீதிமன்றம் மத்திய அரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

பொறுப்பு தலைமை நீதிபதி திரு கிருஷ்ணகுமார், நீதிபதி பாலாஜி அமர்வு இன்று இதற்கான உத்தரவை பிறப்பித்தது.

நான்கு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு அந்த உத்தரவில் குறிப்பிடப்படடுள்ளது.

<<<<<<>>>>

மத்திய நிதிநிலை அறிக்கையில் தமிழகம் புறக்கணிக்கப்படவில்லை என்று பிஜேபி மாநில துணைத்தலைவர் திரு கே பி ராமலிங்கம் கூறியுள்ளார்.

இன்று நாமக்கல்லில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழகத்தின் வளர்ச்சிக்கான திட்டங்களுக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்துள்ளதாக தெரிவித்தார்.

மத்திய நிதிநிலை அறிக்கையில் தமிழகத்திற்கு எந்த வகையில் நிதி குறைக்கப்பட்டது என்பது குறித்து முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் வெள்ளை அறிக்கை வெளியிட முடியுமா என்றும் அவர் வினவினார்.

தமிழகத்திற்கு 11 அரசு மருத்துவக்கல்லூரிகளை பிஜேபி தலைமையிலான மத்திய அரசுதான் வழங்கியதாகவும் திரு கே பி ராமலிங்கம் தெரிவித்தார்.

<<<<<<>>>>

கட்டிட வரைபட அனுமதிக்கான கட்டண உயர்வை தமிழக அரசு திரும்பப் பெற வேண்டும் என்று பாமக நிறுவனர் மருத்துவர் ச ராமதாசு வலியுறுத்தியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், வீடுகள் கட்டுவதற்கான கட்டிட அனுமதி பெறுவதற்கான கட்டணத்தை மாநில அரசு 100 சதவீதத்திற்கும் கூடுதலாக உயர்த்தியுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்த கட்டண உயர்வு கண்டிக்கத்தக்கது என்றும், மக்களை பாதிக்காத வகையில் வருவாயை உயர்த்துவதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்றும் திரு ராமதாசு அந்த அறிக்கையில் கோரியுள்ளார்.

<<<<<<>>>>

தமிழகத்தின் ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று தினங்களுக்கு மழை நீடிக்க வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதனை தெரிவித்த அவர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு உள்ளிட்ட எட்டு மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழை பெய்யக்கூடும் என்றார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1) - 46 செகண்ட்ஸ்)*

கடல் பகுதிகளில் பலத்த காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் அடுத்த ஐந்து நாட்களுக்கு மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்றும் திரு செந்தாமரை கண்ணன் கேட்டுக்கொண்டார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (2) - 30 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>

*மாவட்டச் செய்திகள்*

மயிலாடுதுறை மாவட்டம் தரங்கம்பாடி மகளிர் மேல்நிலைப்பள்ளியில் விலையில்லா மிதிவண்டிகளை மாநில அமைச்சர் திரு மெய்யநாதன் இன்று மாணவிகளுக்கு வழங்கினார்.

-------------

விழுப்புரம் மாவட்டத்தில் தாய்ப்பால் வார விழா விழிப்புணர்வு பேரணியை ஆட்சியர் திரு பழனி இன்று தொடங்கிவைத்தார்.

--------------

காஞ்சிபுரம் மாவட்டத்தில் நாட்டுப்புற கலைஞர்கள் நல வாரிய உறுப்பினர்களுக்கான நிதியுதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று வழங்கினார்.

------------------

கன்னியாகுமரி மாவட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்குமாறு ஆட்சியர் திருமதி அழகு மீனா அலுவலர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

----------------

நெல்லை மாநகராட்சி மேயர் தேர்தலில் திமுக வேட்பாளர் திரு கிட்டு என்ற ராமகிருஷ்ணன் வெற்றிபெற்றார்.

---------------

பெரம்பலூர் மாவட்டத்தில் மனு கொடுத்த பத்தே நிமிடத்தில் மாற்றுத்திறனாளி ஒருவருக்கு மூன்று சக்கர வாகனத்தை ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் வழங்கினார்.

--------------

திண்டுக்கல் கோட்ட அஞ்சலகங்களில் தேசிய கொடி 25 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவதாக கோட்ட கண்காணிப்பாளர் திரு பரமசிவம் கூறியுள்ளார்.

------------

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் தடை செய்யப்பட்ட லாட்டரி சீட்டை விற்பனை செய்த ஒருவரை காவல்துறையினர் கைது செய்தனர்.

----------------

மேல்மருவத்தூர் ஆடிப்பூர விழாவை முன்னிட்டு செங்கல்பட்டு மாவட்டத்திற்கு நாளை உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

--------------

மேட்டூரிலிருந்து காவிரி உபரி நீர் கொள்ளிடம் ஆற்றில் திறந்துவிடப்பட்டுள்ளது.

**<<<<<<>>>>**

*விளையாட்டுச் செய்திகள்*

பாரிஸ் ஒலிம்பிக் டேபிள் டென்னிஸ் போட்டியின் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியா 3-2 என்ற ஆட்டக்கணக்கில் ரோமேனியாவை வென்றது.

--------------

துப்பாக்கிச்சுடும் போட்டியின் 25 மீட்டர் பிரிவில் **Maheswari Chauhan – Anantjeet** இணை வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

தற்போது நடைபெற்றுவரும் வெண்கலப்பதக்கத்திற்கான போட்டியில் இந்த இணை, சீன இணையை எதிர்த்து ஆடிவருகிறது.

-------

பேட்மிண்டன் போட்டியின் ஆடவர் பிரிவில் வெண்கலப்பதக்கத்திற்கான ஆட்டத்தில் இந்தியாவின் லக்ஷயா சென் - மலேசியாவின் **Lee Zii Jia** –வை எதிர்த்து தற்போது ஆடி வருகிறார்.

-----------------

பாரிஸ் ஒலிம்பிக் போட்டித் தொடர்பான அஞ்சல் தலையை மத்திய அமைச்சர்கள் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா, திரு மன்சுக் மாண்டவியா ஆகியோர் இன்று புதுதில்லியில் வெளியிட்டனர்.

**<<<<<END>>>>**